**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**

**Date : 12.05.2026.**

**SC.No. 150/2025.**

**அ.சா. 1 திருமதி. ரமா, க/பெ. சிவசுப்பிரமணியன்.**

(1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2-ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை தொடர்ச்சி :-**

என்னிடம் காட்டப்படும் கத்தியால்தான் சம்பவ சமயத்தில் 2-ம் எதிரி பிரபாகரன் எனது கணவரை குத்தினார். **அந்த கத்தி சா.பொ1**. என்னிடம் காட்டப்படும் கிரைண்டர் கல்லைத்தான் 1-ம் எதிரி என் கணவரின் நெஞ்சில் போட்டார். **மேற்படி கிரைண்டர் கல் சா.பொ2**.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

எனது கணவர் திண்டுக்கல் NGO காலனியில் அபி என்ற பெயரில் வாகனங்கள் வாங்கி விற்கும் பைனான்ஸ் அலுவலகம் வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். எதிரிகள் எனது கணவரிடம் பழைய நான்கு சக்கர வாகனம் வாங்குவதற்காக ரூ.1,25,000/- பேசி முன்பணமாக ரூ.55,000/- பணம் கொடுத்து இருந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பணம் கொடுத்துவிட்டு TN 10 B 2180 என்ற டாடா ஏசி வாகனத்தை எதிரிகள் எடுத்துச் சென்று விட்டார்கள் என்றால் சரிதான். எந்த தேதியில் அவ்வாறு பணம் கொடுத்து மேற்படி வாகனத்தை எடுத்துச் சென்றார்கள் என்று முதல் விசாரணையிலோ, போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ தினத்திற்கு சுமார் 10 அல்லது 11 மாதங்கள் முன்பாக அது நடந்திருக்கும். வாகனம் எடுத்துச் சென்ற பின்னர் பாக்கி பணத்தை எதிரிகள் செலுத்தவில்லை என்றால் சரிதான். பாக்கி பணத்தைக் கேட்டு

வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது வேறு ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் இல்லை. பாக்கி பணத்தை எதிரிகள் செலுத்தாததால் ரூ.55,000/–த்தினை பெற்றுக் கொண்டு வாகனத்தை கொடுத்துவிடுமாறு கேட்டோம் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 1 புகார் மனுவை நான் தான் எழுதினேன். மேற்படி புகார் மனுவில் பாக்கி பணத்தை செலுத்தாததால் ரூ.55,000/–த்தினை பெற்றுக் கொண்டு வாகனத்தை கொடுத்துவிடுமாறு கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன்படி 17.07.2021ம் தேதி எதிரிகள் NGO காலனியில் உள்ள எங்கள் அலுவலகத்திற்கு வந்து மேற்படி வாகனத்தை எங்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் சொன்னதுபோல் பணம் ரூ.55,000/–த்தினை திருப்பிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான், நாங்கள் வேறு வாகனத்தை பார்க்கச் சொன்னோம், அவர்களும் வேறு வாகனம் பார்ப்பதாக சொல்லி சென்று விட்டார்கள்.

மேற்படி பணம் ரூ.55,000/–த்தினை திருப்பி கொடுக்காததால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் மன வருத்தம் இருந்தது என்றால் சரிதான். திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் வைத்து எங்களுக்கும், எதிரிகளுக்கும் பேச்சு வார்த்தை நடந்தது என்றால் சரிதான். ஏன் திண்டுக்கல் பேருந்து நிலைத்தில் வைத்து பேசினீர்கள் என்றால் எதிரிகள் பேச அழைத்தபோது நாங்கள் தாஞ்சாவூர் சென்றுவிட்டு பேருந்தில் திண்டுக்கல் வந்து கொண்டு இருந்தோம். அதனால் திண்டுக்கல் பேருந்து நிலையம் வரச்சொன்னோம். எதற்காக திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு வரச்சொன்னோம் என்பது பற்றி எனது புகாரிலோ, போலீசாரிடம் கொடுத்து வாக்குமூலத்திலோ எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை என்றால் சரிதான். தாஞ்சாவூரில் இருந்து வரும்போது எந்த இடத்தில் வந்து கொண்டு இருக்கும்போது எதிரிகள் கைப்பேசியில் அழைத்தார்கள் என்றால், இடம் தெரியவில்லை.

தஞ்சாவூரில் இருந்து திண்டுக்கல் பேருந்து நிலையம் வரும் வழியில்தான் NGO காலனியில் உள்ள எங்கள் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் எதிரிகளிடம் பேச்சு வார்த்தை நடந்த ஏன் NGO காலனியில் உள்ள எங்கள் அலுவலகத்திற்கு வரச்சொல்லவில்லை என்றால், அவர்கள் தான் பேருந்து நிலையம் வரச்சொன்னார்கள். எதிரிகள் எங்களிடம் நேரடியாக பேசவில்லை. வண்டி வாங்கி கொடுக்கும் இடைத்தரகர் ஒருவர் மூலமாகத்தான் திண்டுக்கல் பேருந்து நிலையம் வரச்சொன்னார்கள். கரூர் பேருந்துகள் நிற்கும் இடத்திற்கு பின்புறம் நின்று பேசிக்கொண்டு இருந்தோம். அந்த இடத்திற்கு பின்புறம் காரைக்குடி பேருந்துகள் நிற்கும் என்றால், எதிர்தாற்போல் காரைக்குடி, நத்தம் செல்லும் பேருந்துகள் நிற்கும். நாங்கள் பேருந்தின் பக்கவாட்டில் நின்று பேசிக் கொண்டு இருந்தோம். அந்த இடம் பயணிகள் அதிகம் இருக்கக்கூடிய இடம் என்றால் சரிதான். அங்கு கடைகள் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்திற்கு சற்று தள்ளி மேற்கு புறத்தில் புறக்காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். வாகனத்தின் பெயரை மாற்றுவதற்கு படிவங்களில் கையொப்பம் செய்து கொடுத்தீர்களா என்றால் இல்லை. சம்பவத்தன்று காலை தான் தஞ்சாவூர் சென்றோம். காலை 11.00 மணியளவில் தஞ்சாவூரில் இருந்து கிளம்பினோம். காயம்பட்டதும் எனது கணவரை திண்டுக்கல்அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் எனது கணவரை சிகிச்சைக்கு சேர்த்தபோது மதியம் சுமார் 2.30 மணிக்கு மேல் இருக்கும். மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தபோது எனது கணவர் சுயநினைவில் இருந்தாரா என்றால் இல்லை. இரண்டு நாட்கள் கழித்துத்தான் எனது கணவருக்கு சுயநினைவு வந்தது. போலீசாரிடம் நான்தான் நடந்த சம்பவத்தைப் பற்றி கூறினேன் என்றால் சரிதான். எனது

கணவரின் இரத்தக்கறை படிந்த உடைகள் எதையும் போலீசார் கைப்பற்றிச் சென்றார்களா என்றால், சட்டையை மட்டும் வாங்கிச் சென்றார்கள். எனது கணவரை யாரும் தாக்கி காயப்படுத்தவில்லை என்றும், எனது கணவர் தடுமாறி விழுந்ததால் தான் அவருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் சம்பவம் நடந்த இடத்தில் நான் இல்லை என்றும், தகவல் கிடைத்து மருத்துவமனை சென்றுதான் எனது கணவரை நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. முறையாக உரிமம் பெற்று பழைய வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் எனது கணவர் செய்யவில்லை என்றால் சரிதான். சா.பொ2 ஐ 1–ம் எதிரியால் தூக்கவே முடியாது என்றால் சரியல்ல, எனது கணவர் ஒதுங்கி கொண்டார் இல்லை என்றால் தலையிலேயே கல்லை போட்டு இருப்பார். எனது கணவர் மீது கல் பட்டதா என்றால், அவர் ஒதுங்கி கொண்டதால் கல் தரையில் தான் விழுந்தது. எனது கணவர் மீது கல் விழவில்லை. எனது கணவர் மீது கல்லைபோட்டு கத்தியால் குத்தியதாக சொல்லப்படும் சம்பவங்கள் குணசேகரன் மருத்துவமனை முன்பாக நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி குணசேகரன் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். நாங்கள் கொடுக்கவேண்டிய பணம் ரூ.55,000/– த்தினை எதிரிகள் கேட்க வந்தபோது எனது கணவர் தான் எதிரிகளைத் தாக்கிவிட்டார் என்றும், எதிரிகள் எனது கணவரை தாக்கவில்லை என்றால் சரியல்ல. 10 மாதங்களுக்கு முன்பாக வாகனம் வாங்கி இருந்தால் நாங்கள் பொறுமையாக இருந்து இருக்க மாட்டோம் என்றும், சம்பவத்திற்கு 10 தினங்கள் முன்பாகத்தான் வாகனம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் பெயர் மாற்றம் செய்யும் படிவங்கள் எதுவும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சமர்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் மீதுள்ள தவறை

மறைப்பதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** இல்லை.

Taken down by me/before me in open court on 12.05.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.05.12 17:17:06 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**